# களத்தில் இளைஞர் அணி

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.



மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி, கோவை வடக்கு மாவட்டம்.



உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.



திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி, நாமக்கல் கிழக்கு மாவட்டம்.



சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி, சேலம் மத்திய மாவட்டம்.



திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.



பேராவூரணி சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்.



பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் வடக்கு மாவட்டம்.



தருமபுரி சட்டமன்றத் தொகுதி, தருமபுரி கிழக்கு மாவட்டம்.

---

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

**(9வது பட்டியல்)**

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| பெரம்பூர் | – எஸ்.ஜோயல் |
| வேளச்சேரி | – ஆர். கிரிராஜன், எம்.பி., |
| கும்மிடிப்பூண்டி | – வி.எஸ்.அரிபாபு |
| பாப்பிரெட்டிப்பட்டி | – சி.வி.எம்.பி.எழிலரசன் |
| வந்தவாசி | – நரேஷ்குமார் |

**குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 10.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் ச. கணேசனுக்கு கை சன்னத்தில் வாக்கு கேட்டு மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றிய பகுதியில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தலைமையில் தொகுதி பார்வையாளர் முன்னாள் அமைச்சர் தங்கவேலு முன்னிலையில் வாக்கு சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ. முத்துச்செல்வி, ஒன்றிய செயலாளர் பெரியதுரை உள்பட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மையினருக்கான தி.மு.க.வின் சமூகநீதிப் பணிகள் மகத்தானது!

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிப்போம்!

### அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி பொதுச் செயலாளர் அ.ஜோசப்ராஜ் அறிவிப்பு!

*சென்னை, ஏப்.12-*

அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளர் அ.ஜோசப்ராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தி.மு.க.வின் சமூக நீதிப் பணிகள் எண்ணில் அடங்காதவை. சிறுபான்மையினரின் பாதுகாவலாக, உற்ற தோழனாக தி.மு.க. இருந்து வருகின்றது.

“மதச்சார்பற்ற தன்மை தான் இந்தியாவில் வாழும் அனைத்து மக்களையும் அரவணைத்து - ஒற்றுமையோடு வாழ வைத்திருக்கும் அன்புக் கரம். மதச்சார்பற்ற தன்மைக்குப் புறம்பாக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் புறக்கணிப்போம். மக்களுக்கு விழிப்புணர்வூட்டி உறுதியுடன் எதிர்ப்போம்” என்று அறிவித்துள்ள தி.மு. கழகத்தின் சிறுபான்மையினருக்கான சமூக நீதிப் பணிகளில் சிலவற்றை பட்டியலிடுகின்றேன்.

1 தமிழ்நாட்டில் வாழும் மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் வகையில், தமிழ்நாடு மாநில சிறுபா ன்மையினர் ஆணையத்தை 1989-ம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைத்தார்.

2 தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2010-ம் ஆண்டு நிறைவேற்றினார்.

3 பிற்படுத்தப்பட்ட இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007-ம் ஆண்டு தி.மு.க. அரசு நிறைவேற்றியது.

4 கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான “கிறித்தவ தேவாலயங்களில் பணி புரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது.

5 குடியுரிமை (திருத்த) சட்டம், 2019 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதற்கு தி.மு.க. பெரிதும் எதிர்ப்பு தெரிவித்தது.

6 ஊரகப் பகுதிகளில் பயிலும் சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி, தொடர்ந்து கல்வி பயில ஊக்கத் தொகையாக 3-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ரூ.500-ம் மற்றும் 6-ம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1000-ம் தளபதி ஸ்டாலின் தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

7 சிறுபான்மையின மாணவ மாணவியர் வெளிநாடுகளில் பட்ட மேற்படிப்பு மேற்கொள்ள ஏதுவாக ஆண்டுக்கு 10 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித் தொகை வழங்கிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

8 ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மை இனந்தைச் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஏதுவாக மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

9 தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடந்த 4-ஆண்டுகளில் 31,425 பயனாளிகளுக்கு ரூ.207 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

10 அரசுப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு “முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்” மூலம் காலை உணவு வழங்கப்பட்டு வந்தது. சிறுபான்மையினரின் வேண்டுகோளை ஏற்று அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிக் கூடங்களுக்கும் இத் திட்டம்விரிவுபடுத்தப்பட்டது.

11 தமிழகத்தில் உள்ள கிறித்தவ மற்றும் இசுலாமிய சமுதாயத்தினர் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களில் உள்ள பழுதடைந்த சுற்றுச் சுவர்களை சீரமைத்தல், புதிதாக சுற்றுச் சுவர் அமைத்தல் தி.மு.க. அரசால் செய்யப்பட்டு வருகின்றது.

12 தமிழில் முதல் நாவல் எழுதிய மாயுரம் வேதநாயகம் பிள்ளையின் முழு உருவச் சிலையுடன் கூடிய அரங்கம் மயிலாடுதுறை நகர்மன்ற வளாகத்தில் 2026 அன்று தளபதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

13 மாநில அரசால் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மதச்சார்பு சிறுபான்மையின (Religions Mority Sutum) அந்தஸ்து சான்றிதழ், காலம் குறிப்பிடப்படாமல் நிரந்தரச் சான்றிதழாக வழங்க அரசாணை 2024-ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

14 சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் பணியிடங்கள் தொடர்பான முட்டுக்கட்டையை முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் தலைமையிலான அரசு தீர்த்து வைத்தது. இதன் மூலம் 350-க்கும் மேற்பட்ட பணியமர்த்தல்களுக்கு ஒப்புதல் அளிக்க வழிவகுத்தது. இதனால், 34 கிறித்தவ சிறுபான்மை நிறுவனங்கள் பயனடைந்தன.

15 தொன்மையான தேவாலயங்களைப் புனரமைக்க, மற்றும் பழுது பார்க்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

16 கிறித்தவ மதத்திற்கு மாறிய பின்னரும் ஆதி திராவிடர்கள் தொடர்ந்து சாதிய வன்முறைகளை எதிர்கொள்வதாகவும், அதனால் பட்டியல் சாதியினருக்கு வழங்கப்படும் சலுகைகளை அவர்களுக்கும் வழங்குவது நியாயமானது என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் தீர்மானம் நிறைவேற்றினார்.

17 மயிலாடுதுறை அருகே உள்ள தரங்கம்பாடியில் 17-ம் நூற்றாண்டு கிறித்தவப் பரப்புரையாளர் பர்ந்தலோமியஸ் சீகன்பல்கின் நினைவிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. சீகன் பால்க பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

18 ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இசுலாமியர்களுக்காக சென்னை நங்கை நல்லூரில் ரூ.65-கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஏனஜ் இல்லம் கட்டப்பட்டு வருகிறது.

19 ஹஜ் பயனாளி ஒருவருக்கு ரூ.25,000 வீதம் ஹஜ் மானியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சுயமரியாதை சமூக நீதி சமத்துவம் - சகோதரத்துவம் - மதச்சார்பின்மை - கூட்டாட்சிக் கருத்தியல் - அதிக அதிகாரங்களைக் கொண்ட மாநிலங்கள் - அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சம உரிமை கொண்ட மகத்தான தி.மு.க. ஆட்சி தொடர, ஜனநாயகம், சமூக நீதி காக்கும் அரசு அமைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிப்போம்.

இவ்வாறு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளர் அ.ஜோசப்ராஜ் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பரமக்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கே.கே. கதிரவன் பரமக்குடி மேற்கு ஒன்றியம் புதுப்பட்டி கிராமத்தில் வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட ஊராட்சித் தலைவர் திசைவீரன், பரமக்குடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் பரமக்குடி சட்டமன்ற பொறுப்பாளர் ஜோதிபாலன், முன்னாள் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர், பொதுக்குழு உறுப்பினர் பூமிநாதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வட்டாரத் தலைவர் தட்சிணாமூர்த்தி, முக்குலத்தோர் புலிப்படை சுந்தரபாண்டியன் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், கூட்டணி கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.